**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 07.04.2026</u>**

**OS.176/2017**

**பி.வா.சா.1 திரு.வேலு**

**பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. வாதி இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் கடன் வாங்கியுள்ளேன் அதற்காக இந்த சொத்து மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி ராஜிவ்காந்தியை எப்போது இருந்து எனக்கு தெரியும் என்றால் அவர் சிறுவராக இருந்தபோதே எனக்கு தெரியும். வாதி தாவா ஒப்பந்த பத்திரம் எழுதும்போது அவர் எந்த ஊரில் வசித்தார் என்றால் அவர் அக்ராஹரத்தில் இருந்தார். தற்போது ராஜிவ்காந்தி எங்கு வசிக்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வாதி என்ன தொழில் செய்கிறார் என்று தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. வாதி சென்னையில் கேட்டரிங் தொழில் செய்துவருகிறார் அதனால்தான் எனது நிலத்தை வாதிக்கு விற்பதற்கு முன்வந்தேன் என்றால் இல்லை.

2. வழக்கு சொத்து என்பது ஒரே சொத்தாக உள்ளதா அல்லது தனித்தனியாக உள்ளதா என்றால் அது தனித்தனியாக உள்ளது. தாவா சொத்து சர்வே எண்.71/3 மற்றும் 71/5 ஆகிய இரண்டு சர்வே எண்ணுக்கு இடையே உள்ள சொத்து என்னுடையதா என்றால் இடையில் உள்ள சொத்து எனது அப்பா பெயரில் உள்ளது. சர்வே எண்.71/3 மற்றும் 71/5 க்கும்

இடைப்பட்ட நிலத்தில் உள்ள சொத்தை நான் ஒரு தனியார் வங்கியில் வைத்து கடன் வாங்கியுள்ளேன் என்றால் இல்லை. மேற்படி தனியார் வங்கியில் வாங்கிய கடனை நான் கட்டாததால் அந்த நிலத்தை வங்கி நீதிமன்றத்தின்மூலம் விற்பனை செய்துவிட்டது என்று சொன்னால் இல்லை. மேற்படி சர்வே எண்.71/3 மற்றும் 71/5 க்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள சொத்து வீட்டுமனைகளாக பிரிக்கப்பட்டு உள்ளது என்றால் இல்லை.

3. தாவா சொத்துக்களான சர்வே எண்.71/3, சர்வே எண்.71/5 மற்றும் சர்வே எண்.78/1A நிலமானது நெடுஞ்சாலைக்கு அருகிலேயே உள்ளதா அல்லது தள்ளி உள்ளதா என்றால் கொஞ்சம் உள்ளுக்குள் உள்ளது. நெடுஞ்சாலைக்கும் வழக்கு சொத்திற்கும் இடையே யாருடைய சொத்து உள்ளது என்றால் ராஜிகவுண்டர் பெயரில் உள்ளது. மேற்படி ராஜிகவுண்டர் யார் என்றால் என்னுடைய அப்பா. எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தமிழோ ஆங்கிலமோ எழுதப்படிக்க தெரியாது. நான் கையெழுத்து செய்வேனா அல்லது கைநாட்டு வைப்போனா என்றால் கையெழுத்து செய்வேன். வழக்கு ஒப்பந்தத்தில் உள்ள சங்கதிகளை யாரேனும் படிக்க சொல்லி கேட்டு கையொப்பம் செய்தேனா என்றால் நான் படிக்கச்சொல்லி கேட்டு கையொப்பம் போடவில்லை, கடனுக்காக எழுதிக்கொண்டோம் என்று சொன்னார்கள் கையொப்பம் போட்டேன். நான் மேற்படி சொல்லியுள்ள சங்கதியான தாவா ஒப்பந்த பத்திரம் படிக்கசொல்லி கேட்டு கையொப்பம் செய்யவில்லை, கடனுக்காக எழுதிக்கொண்டோம் என்று சொன்னதால்

கையொப்பம் செய்தேன் என்ற சங்கதியை எனது பதில் வழக்கறிஞர் அறிவிப்பு, பதிலுரை, எனது சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் அது எனக்கு நினைவில்லை.

4. எனக்கு பூர்விகம் எ.வெளாம்பட்டி கிராமமா என்றால் ஆமாம். எனது தாத்தா கொளந்தைகவுண்டர் என்பவருக்கு பூர்வீகம் எது என்றால் செட்ரம்பட்டி. எனது தாத்தா கொளந்தைகவுண்டரின் மனைவியான எனது பாட்டியின் பூர்வீகம் எது என்றால் அவரும் அதே ஊர்தான். செட்ரம்பட்டி என்ற ஊர் எ.வெளாம்பட்டியில் இருந்து எவ்வளவு தூரம் என்றால் 4 km தூரம் இருக்கும். எ.வெளாம்பட்டியில் எனது தாத்தா எப்படி வந்து செட்டில் ஆனார் என்றால் எனது தாத்தாவின் அக்கா அவருக்கு குழந்தை இல்லாததால் எனது தாத்தாவை கூட்டிவந்து வைத்துக்கொண்டார் அவ்வாறுதான் அவர் அங்கு செட்டில் ஆனார். எனது தாத்தாவிற்கு பூர்வீக சொத்துக்கள் எதுவும் கிடையாது அவருடைய அக்கா கொடுத்த சொத்துக்கள் தான் என்றால் இல்லை, எனது தாத்தா சுயமாக சம்பாதித்தார். வழக்குசொத்து எனது தாத்தா சுயமாக சம்பாதித்த சொத்து தான் என்றால் சரிதான்.

5. எனது தாத்தா வழக்கு சொத்தை சுயமாக சம்பாதித்ததால் வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களை எனது தாத்தா எனக்கு 07.03.2007–ம் தேதியில் ஒரு தானசெட்டில்மெண்ட் மூலம் சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதனால்தான் நான் வழக்கு சொத்து குறித்து நான் வாதியிடம் ஒரு கிரைய ஒப்பந்தபத்திரம் எழுதிக்கொண்டேன் என்றால் இல்லை, கடனுக்காகத்தான்

எழுதிக்கொடுத்தேன். 26.08.2016–ம் தேதியிட்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் நான் சார்பதிவாளர்அலுவலகத்துக்கு சென்று தான் நான் கையொப்பம் போட்டு கொடுத்தேன் என்றால் சரிதான், அந்த ஒப்பந்த பத்திரம் நான் கடன் கேட்டதால் ஒப்பந்த பத்திரம் எழுதிக்கொடுத்தால்தான் கடன் கொடுப்பதாக சொன்னார், அதற்காக நான் அதனை எழுதிக்கொடுத்தேன். தாவா ஒப்பந்த பத்திரம் யார் எழுதி டைப் செய்தார்கள் என்றால் சாந்தி என்பவர் செய்தார்.

6. எனக்கு படிக்க தெரியவில்லை என்று சொல்லும்போது அந்த பத்திரத்தை தயார் செய்த சாந்தி என்பவரிடம் என்ன அதில் எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் நான் கேட்கவில்லை. நான் எழுதிக்கொடுத்த ஆவணம் அரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ஆவணமாக பதிவாகியுள்ளது அதனை நான் ஒரு நகல் போட்டு வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒப்பந்த பத்திரத்தில் கையெழுத்து போடும்போது சார்பதிவாளர் அந்த பத்திரத்தை படித்துப்பார்த்தேனா என என்னிடம் கேட்டாரா என்றால் அப்படி அவர் கேட்கவில்லை. நான் அந்த பத்திரத்தில் கையொப்பம் போடும் முன்பாக என்ன எழுதி உள்ளது என்று அருகில் இருந்தவர்களிடம் கேட்டாவது தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை.

7. வழக்கு தாக்கல் செய்யும் முன்பு வாதி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் அதற்கு நான் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் வழக்கு சொத்தானது

கூட்டுக்குடும்ப சொத்து அதில் எனது மகளுக்கும் உரிமை உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது எனது தாத்தா கொளந்தைகவுண்டர் எனக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் கொடுத்ததால் அது எனக்கு தனிப்பட்ட சொத்து, அது கூட்டுக்குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது மகளுக்கு உரிமை இருப்பதாக சொல்வது எல்லாம் வாதியின் வழக்கை நிராகரிப்பதற்காக பொய்யாக சொல்லப்பட்ட சங்கதி என்றால் சரியல்ல.

8. எனது தாத்தா கொளந்தைகவுண்டர் எனக்கும், எனது அண்ணன் மூவேந்திரன் என்பவருக்கும் கொடுத்த சொத்துக்களை தவிர்த்து மற்ற சொத்துக்களை பொறுத்து அரூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.No.25/2010 என்ற வழக்கை நான் பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எங்கள் குடும்பத்தில் சமாதானம் ஆனதால் மேற்படி நான் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கு 06.09.2012–ம் தேதி தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் இல்லை, நான் வழக்கே தாக்கல் செய்யவில்லை. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் மூவேந்திரன், ஜானகி, நான், வள்ளி ஆகியோர். என்னுடன் பிறந்த வள்ளி, ஜானகி ஆகியோர் எங்கள் குடும்ப சொத்தில் பாகம் கேட்டு அசல் வழக்கு எண்.21/2013 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் பதிலுரை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். எனது அண்ணன் மூவேந்திரன் பதிலுரை தாக்கல் செய்தாரா என்றால் தாக்கல் செய்தார். நான் மேற்படி வழக்கில்

தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் எல்லாம் எனது தாத்தா கொளந்தை கவுண்டர் தனிப்பட்ட சொத்து அந்த சொத்தை எனக்கு தானசெட்டில் மெண்ட் எழுதி கொடுத்துவிட்டதால் அது பாகப்பிரிவினைக்கு உட்படாது எனது மேற்படி வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் அப்படி நான் சொல்லவில்லை கூட்டுக்குடும்ப சொத்து என்று சொல்லி அவர்களுக்கு உரிய பாகத்தை நான் எடுத்துக்கொள்ளசொல்லி சொல்லிவிட்டேன்.

9. மேற்படி வழக்கு 17.02.2026–ல் தீர்ப்பாகி உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த சொத்துக்களில் ஜானகி, வள்ளி ஆகியோருக்கு எந்தெந்த சொத்துக்களில் பாகம் உண்டு என நீதிமன்றம் குறிப்பிட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வழக்கு முடிந்த பிறகு எனது வழக்கறிஞரை சந்தித்தேனா என்றால் சந்தித்தேன். வழக்கறிஞர் அந்த தீர்ப்பு பற்றி என்ன சொன்னார் என்றால் ஆர்டர் வரவில்லை என்று சொன்னார். மேற்படி வழக்கின் தீர்ப்பு ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டது, அதில் எனது சகோதரிகள் தாக்கல் செய்த வழக்கில் இந்த தாவாவில் உள்ள சொத்தில் பாகம் கோரமுடியாது என தீர்ப்பாகி உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தீர்ப்பில் வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்கள் எனது தாத்தா எனக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்ததால் அந்த சொத்து எனது தனிப்பட்ட சொத்துஎன்றும் அதில் எனது சகோதரிகள் பாகம் கோரமுடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது என்ற விவரம் எனக்கு நன்கு

தெரியும் ஆனால் அதனை மறைத்து நான்பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. எனது சகோதரிகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கின் எண்.21/2013, அந்த வழக்கில் காணும் சொத்துக்கள் தற்போது நிலுவையில் உள்ள சொத்துக்களும் அடங்கும் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்படி அசல் வழக்கு எண்.21/2013 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போதுதான் வாதியிடம் வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தை நான் செய்துகொண்டேன் என்றால் சரிதான், ஆனால் அதை நான் கடனுக்காகத்தான் போட்டுக்கொண்டேன். வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் எனது சகோதரிகள் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வதுபோல வா.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் நான் சொல்வதுபோல எனது சகோதரிகள் தாக்கல் செய்த பாகப்பிரிவினை வழக்கை பற்றி எதுவும் சொல்லவில்லை, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. நான் அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலும், பதிலுரையிலும், நான் தாக்கல் செய்த முதல் விசாரணை சாட்சியத்திலும் எனது சகோதரிகள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பாகப்பிரிவினை அசல் வழக்கு எண்.21/2013 பற்றி நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 30.11.2016ல் எனது வழக்கறிஞர் மூலம் ராஜிவ்காந்தி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு

என்று சொன்னால் அது எனக்கு படிக்க தெரியாததால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. அனுப்பிய பதில் அறிவிப்பில் உள்ள சங்கதிகள் குறித்து எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொ்ண்டேனா என்றால் நான் அந்த அனுப்பிய பதில் அறிவிப்பில் என்ன உள்ளது என்பது பற்றி எனது வழக்கறிஞரிடம் கேட்கவில்லை.

12. நான் வாதியிடம் கடன் வாங்கியதாக சொல்லியுள்ளேன் அவ்வாறு வாதியிடம் கடன் நேரடியாக சென்று கேட்டேனா அல்லது வேறுயார் மூலமாவது கேட்டேனா என்றால் நானும், எனது மனைவியும் ராஜிவ்காந்தி வீட்டிற்கு சென்று கேட்டோம். வாதி ஊரில் வட்டி தொழில் செய்து வருகிறாரா என்றால் இல்லை, அவரிடம் கடன் கேட்டால் கொடுப்பார்கள் என்று சொன்னார்கள் அதனால் கேட்டேன். யார் அவ்வாறு வாதியிடம் கடன் கேட்டால் கொடுப்பார் என்று சொன்னது என்றால் எங்கள் ஊரைச்சேர்ந்த மாயக்கண்ணன் என்பவர் சொன்னார்.

13. ஆவணத்தை சாந்தி என்பவர் தயாரித்தபோது அங்கு யார் யார் இருந்தது என்றால் நானும், எனது மனைவியும் இருந்தோம். அந்த ஆவணத்தை பதிவு செய்யும்போது யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் சாமிநாதன், ஜெயசீலன், தமிழன், சண்முகம் ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டார்கள். எனது நிலத்துக்கும், தர்மபுரி–அரூர் நெடுஞ்சாலைக்கும் இடையே புறம்போக்கு நிலம் உள்ளது என்றால் சரியல்ல, அது பட்டா நிலம்தான் உள்ளது, அந்த பட்டா ராஜிகவுண்டர் பெயரில் உள்ளது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும்.

நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வாதிக்கு மீத கிரைய தொகையை செலுத்தி கிரையம் செய்து கொள்ள வசதி இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் அப்படி நான் சொல்லவில்லை. 2016ம் ஆண்டு வங்கி எனது சொத்துக்களின் மீது எடுத்து நடவடிக்கைகாரணமாக வழக்கு சொத்தை விற்றாவது வங்கி நடவடிக்கையில் இருந்து மீண்டுவிடலாம் என்பதற்காகதான் தாவா சொத்துக்களை வாதிக்கு விற்பதாக ஒப்பி வாதியுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் இல்லை.

14. வழக்கு சொத்துக்கள் விவசாய பூமியா அல்லது மானாவரியா என்றால் விவசாய பூமிதான். இந்த வழக்கை தாக்கல் செய்தபிறகு தாவா சொத்தில் ஒரு செட் அமைத்துள்ளேன் என்றால் அதற்கு முன்பாகவே அதை நான் அமைத்துவிட்டேன். நான் சொல்வதுபோல எந்த வீடும் தாவா சொத்தில் கிடையாது அவ்வாறு வீடு இருந்திருந்தால் அதனை நான் ஒப்பந்தத்தில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை மேம்படுத்தியுள்ளேன் என்று சொன்னதற்காக தாவாசொத்தில் செட்டை நான் போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வாதி என்னை ஏமாற்றி விட்டார் என்று சொல்லியுள்ளேன், வாதி என்னை ஏமாற்றி விட்டார் என்று காவல் நிலையத்தில் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை, நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதால் புகார் கொடுக்கவில்லை.

15. வழக்கு சொத்து பொறுத்து ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியான 26.08.2016-ம் தேதியில் அரசாங்கம் நிர்ணயித்த சொத்து மதிப்பு ஏக்கர் 3

இலட்சம் என்று சொன்னால் சரியல்ல, அது ஏக்கர் 3 கோடிக்கு விற்பனையானது. நான் தவறான சங்கதிகளை நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மை சங்கதிகளை நீதிமன்றத்தில் தெரிவிக்காமல் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு ராஜிவ்காந்தி கேட்டுக்கொண்ட பரிகாரத்தின்படி தீர்ப்பாக வேண்டியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2026.04.07 15:38:01 +0530